தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு" — திருக்குறள்

தொகுதி III. } ஸித்தார்த்தஹு மாசிமீ } பகுதி 7

வீட்டில் காணும் அற்பப் பிராணிகள்

கொசு

The Mosquito

சென்னைப் பிரெஸிடென்ஸி கலாசாலையில் உயிர் நூல் ஆசிரியரான ஸ்ரீமான் R. கோபாலையரவர்கள், M.A., L.T., எழுதியது.

வீட்டு ஈயைப் போலவே இச் சிறு ஜந்துவும் வீடுகளில் காணப்படும் பிராணிகளுள் ஒன்று. ஆனால் ஈக்களைப் போலவே பகலில் உலவிவரும் ஜந்து அல்ல. கொசுக்கள் சாதாரணமாக இருட்டான உடனே வெளிவந்து உலவ ஆரம்பிக்கும். பகற் காலத்தில் வீட்டின் மூலைகளிலும், செடிகளின் மறைவிலும் தொங்கவிட்டிருக்கும் துணிகளின் மத்தியிலும் சாக்கடை

நீரிலும், மற்ற நீர்த் தேக்கங்களிலும், பாழுங்கிணற்றிலும் தங்கியிருந்து அள்தமித்தவுடன் வெளிவரும். இப் பூச்சிகளும் மனிதனுடைய பகைவர்களைச் சேர்ந்தவை யாகும். அவனைத் தூங்கவொட்டாமல் தொந்திரவு செய்தும், அவனுக்குப் பல வகை விஷசுர முண்டாக்கியும் எப்பொழுதும் தீங்குசெய்தே ஜீவிக்கின்றன. ஈயைப் போலவே உஷ்ண தேச மெங்கும் இவை வியாபித்துள்ளன.



அநபிலீஸ். கூலக்ஸ்.

கொசுக்கள் உட்காரும் தோற்றம்.

தென் இந்தியாவில் பலவிதக் கொசுக்கள் இருப்பினும் அவைகளுள் கூலக்ஸ் (Culax) அநபிலீஸ் (Anopheles) ஸ்டீகோமியா (Stegomyia) என்பவைகளே முக்கிய மானவை. இவைகளில் பின் கூறிய இனம் கறுப்பு நிறமாயும் குறுக்குக் கோடுகள் உள்ளதாயு மிருக்கும். மேலும் பகலில் உலவி மனிதர்கள் மேல் உட்கார்ந்து உதிரத்தை உறிஞ்சும் சுபாவமுள்ளது. முதல் இரண்டு ஜாதிக் கொசுக்களும் இராக்

காலத்திலேயே வெளிவருவன. இவ்விரு விதக் கொசுக்களும் சுவற்றில் உட்கார்ந்திருக்கும் போது கவனித்தால் கூலக்ஸ் ஜாதி தமது தேகத்தைச் சுவற்றிற்கு சமாந்திரமாகவாவது, அல்லது உடலைச் சுவற்றின் பக்கம் வளைத்துக் கூனிக்கொண்டாவது உட்காரும். மூன்றும் ஜோடிக் கால்கள், சுவற்றில் வைக்கப்படாமல் முன்னே நீட்டப்பட்டிருக்கும். அனொபிலீஸ் கொசுக்களோ அவ்விதம் உட்காராமல் தேகத்தை சுவற்றிற்குச் சாய்வாக வைத்து உட்காரும் தன்மையன. (படத்தைக் கவனிக்க.)

கோசுவின் தேக அமைப்பு:—கொசுவின் தேகமும், கரப்பான் ஈ முதலிய பூச்சிகளில் இருப்பது போலவே, தலை' மார்பு, உடல் எனப்படும் மூன்று பிரிவுகளாலாகியது.

தலை சற்று சிறுத்து உருண்டையானது. முகம், தலையுச்சி, கன்னம் எனப்படும் பாகங்கள் கரப்பானுக்கு இருப்பது போலவே இப் பிராணியின் தலையிலும் உள.

கலப்புக்கண்கள் இரண்டும் பல சிறு கண்களின் சேர்க்கையினால் பெரிதாய்த் தலையின் பக்கத்தில் அமைந்துள்ளன. ஸ்பரிசக் கொம்புகள் பக்கத்திற்கு ஒன்றாக ஒரு ஜோடி உண்டு. 14-16 கணுக்களால் ஆகியது. ஆண் கொசுவின் ஸ்பரிசக் கொம்புகள் நீண்டு அடர்ந்த மயிர்களுடன் கூடியிருக்கும். பெண் கொசுவின் ஸ்பரிசக் கொம்புகளில் மயிர் நீண்டு அடர்ந்திராது. இவ் வித்தியாசத்திலிருந்து, கொசுக்களை ஆண் என்றும் 'பெண்' என்றும் எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

வாய் உறுப்புகள், துதிக்கை:—ஈக்கு இருப்பதுபோலவே கொசுவுக்கும் தலையின் அடிப் பாகத்தில் உறிஞ்சும் குழாய் ஒன்று உண்டு. ஆனால் ஈ தனது துதிக்கையின் நுனியிலுள்ள நக்குமிதழ்களால் திரவ பதார்த்தங்களை நக்கி உறிஞ்சும்

திறமை உள்ளதே தவிர மனிதன் மேலாவது மிருகங்களின் மேலாவது உட்கார்ந்து உள்ளிருக்கும் உதிரத்தை உறிஞ்சும் சக்தி யற்றது. கொசுவுக்கு மனிதன் தோலைக் குத்தவும், குத்தி உள்ளிருக்கும் உதிரத்தை உறிஞ்சவும் தகுந்தபடி உறிஞ்சும் குழாயும் அக் குழாயின் நடுவில் அதி கூர்மையான ஐந்து உறுப்புகளும் உள. இவைகளை ரண ஊசிகள் எனலாம். கொசு தேகத்தின்மேல் அமர்ந்தவுடன் சரியான இடம் தேடித் தனது ரண ஊசிகளினால் தோலைத் துளைத்து தனது உறிஞ்சும் குழாய் வழியாக உதிரத்தை உள் இழுக்க ஆரம்பிக்கும்.

முதல் ஜோடி உதவி ஸ்பரிசக் கொம்புகள். இவை துதிக்கைக்கு இரண்டு பக்கத்திலு மிருந்து கிளம்பி முன்நீட்டிக்கொண்டிருக்கும். இவை ஆண் கூலக்ஸ் கொசுவில் நீண்டும் மயிர் அடர்ந்தும் இருக்கும். பெண்கொசுவில் குட்டையாயிருக்கும்.

வாய் உறுப்புகளின் மாறுபாடுகள். கொசுக்களின் வாய் உறுப்புக்களையும் கரப்பான் பூச்சியின் வாய் உறுப்புக்களையும் வைத்துத் தாரதம்மியத்தைக் கவனிப்போமாயின் பல வித்தியாசங்கள் காணப்படும்.

கரப்பானில் இருப்பது போலத் தட்டையான மேல் உதடாவது ஒன்று சேர்ந்த கீழுதடாவது இதற்கு இல்லை. கடிக்கும்படி பற்களோடு கூடிய தாடைகளு மில்லை. முதல் ஜோடி உதவி அலகுகளிருப்பதாகவும் தெரியவில்லை. கொசுவில் வாயைச் சேர்ந்த உறுப்புக்களெல்லாம் மிகவும் மாறுபட்ட ஸ்திதியி லிருக்கின்றன. இம் மாறுபாடுகளும் உதிரத்தை உறிஞ்சி வளரும் கொசுக்களின் வாழ்க்கைக்கு ஏற்றபடி அமைந்துள்ளன. அது எங்ஙன மென்றால், மேலுதடும் கீழுதடும்

நீண்டு ஒன்றன் மேலொன்றாய் உட்புறம் குவிந்து மேற் கூறிய உறிஞ்சும் குழாய் எனப்படும் துதிக்கையாக மாறியும், இவ்வுதடுகளின் இடையே உள்ள உறுப்புக்களான நாக்கும். அதன் பக்கத்தி லிருக்கும் தாடைகளும் அவற்றின் பின்னிருக்கும் முதல் ஜோடி உதவி அலகுகளும் ஒன்றுசேர்ந்து நீண்டு கூர்மையான 'ரண ஊசிகள்' எனப்படும் உறுப்புகளாக மாறியும் உள்ளன. இவ் விதம் கொசுவின் வாய் உறுப்புகள் குத்தவும் உறிஞ்சவும் தகுந்தபடி ஏற்பட்டுள்ளன.

மார்பு இப்பாகம் 'முன் மார்பு' 'நடு மார்பு' 'பின் மார்பு' எனப்படும் தேக வளையங்களின் நெருங்கிய சேர்க்கை யினாலாகியது, மார்பின் மேற் புறத்தில் இரண்டு மெல்லிய பல நரம்புகளோடு கூடிய இரக்கைகள் உண்டு. மார்பின் அடிப் பாகத்தில் மூன்று ஜதை கால்கள் உள்ளன. கால் ஒவ்வொன்றும் மேல்துடை, சிறுதுடை, துடை, முழங்கால், கணைக்கால் எனப்படும் ஐந்து பிரிவுகளா லாகியது. கணைக்கால் ஐந்து சிறு கணுக்களாலானது. கடைசிக் கணுவுக்கு நக மூண்டு.

உடல். இம் மூன்றாவதான பிரிவு ஒன்பது வளையங்களாகியது ஒன்பதாவது வளையத்தின் இறுதியில் முட்டை வைப்பிகள் இரண்டு இருப்பதைக் கவனிக்க.

(தொடரும்.)

ஒலி நூல்
Sound

இரண்டாவது அத்தியாயம்.

(தொடர்ச்சி.)

ஸ்ரீமான் K. P. யஜ்ஞேசுவர சர்மா, M.A., L.T.

எழுதியது.

அதேபிரயோகம்: இன்னொரு விதமாக—ஒரு காற்று நீக்கும் கருவியின் (Air-pump) தட்டில் ஒரு கண்ணாடி ஜாடியை வைத்து (ஜாடிக்கு அடி கிடையாது; Bell-jar) அதன் மேல் துவாரத்தை ஒரு ரப்பர் அடைப்பினால் மூடவேண்டும். இந்த அடைப்புக்குள் வழியாக இரண்டு கம்பிகளைச் செலுத்தி, கம்பிகளின் வெளி நுனிகளை ஒரு மின்சார செல் (Electric-cell) வின் போல் (Poles) களிலும், மறு நுனிகளை ஒரு மின்சார மணி (Electric bell) யுடனும், படத்தில் காணுகிறது போல் மாட்டி மணி ஜாடிக்குள் தொங்கும்படி செய்தால், மின்சார சக்தியால் மணி யடிப்பது நன்றாய்க் கேட்கும். ஆனால் காற்று நீக்கியின் கைப்பிடியை மேலும் கீழுமாக அசைத்துக் கண்ணாடி ஜாடியிலுள்ள வாயுவை வெளிப்படுத்தினால் மணியோசை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து சிறிது நேரத்தில் ஓசையே நின்றுவிடும். மறுபடியும் ஜாடியில் வாயுவை விட்டால் ஓசை நன்றாய்க் கேட்கும்.

ஆதலின் இவ்விரு திருஷ்டாந்தங்களாலும் ஒலி சாதாரணமாக வாயுவில் பரவிக் காதில் வந்து சேருகிற தென்று நன்றாய் விளங்குகிறது.

4. கடின திரவ வஸ்துக்களிலும் ஒலி பரவும்:—ஒரு குளத்தில் ஒரு மனிதன் முங்கி, இரண்டு கற்களையாவது மரத் துண்டுகளை யாவது ஒன்றோடொன்றைக் கொட்டினால் அதனு லுண்டாகும் ஓசையை அதே நீர் நிலையில் சற்று தூரத்தில் முங்கி யிருக்கிற இன்னொருவன் நன்றாய்க் கேட்கலாம். இன் னும் ஒரு நீண்ட பெஞ்சியின் ஒரு கோடியில் ஒருவன் குண்டூ சியால் 'கீச்சினால்' அது மறு கோடியில் காதைவைத்துக் கொண்டிருக்கிறவனுக்கு நன்கு கேட்கும். பெஞ்சியை விட்டுக்



காதை எடுத்தால் கேட்காது. இரண்டு தந்திக் கம்பங்களின் அருகே இருவர் நின்றுகொண்டு ஒருவன் தன் பக்கத்திலு ள்ள கம்பத்தை (Telegraph pole) ஒரு கல்லா லடித்தால், மற்றவனுக்கு அந்த அடி இரண்டு தடவை கேட்கும். ஒன்று வாயு மூலமாகவும், மற்றது தந்திக் கம்பி மூலமாகவும் வந்து வேக வித்தியாஸத்தினால் வேறாகக் கேட்கின்றன. இத்தகைய பரீக்ஷைகளி லிருந்து நமது வாயு மண்டலத்திலுள்ள காற்று மட்டு மல்லாமல் மரம் உலோகங்கள் முதலிய கடின பதார்த்

தங்கள் ஜலம் போன்ற திரவ பதார்த்தங்கள் ஆக்ஷிஜன் (பிராண வாயு) நைட்ரஜன் கரிஅமிலவாயு முதலிய வாயு பதார்த்தங்கள், ஆகிய எல்லா வஸ்துக்களிலும் ஒலி வியாபிக்கும் என்று தெரிகிறது.

ஆனால் சில பதார்த்தங்களில் எளிதாகவும் சிலவற்றில் வெகு சொற்பமாகவும் ஒலி செல்லுகிறது. உதாரணமாகப் பஞ்சு அல்லது கம்பளி மெத்தையில் ஒரு கைக்கடியாரத்தை வைத்தால் அதன் டிக், டிக் சத்தம் நன்றாய்ப் புலப்படாது. ஒரு மர மேஜையின் மீது வைத்தால் கேட்கும். இன்னும் கண்ணாடியின் வழி ஒலி எளிதில் செல்லாது. ரெயில்வே ஸ்டேஷன்களில் ஸ்டேஷன் அறையின் கண்ணாடிக் கதவு சாத்தி யிருக்கும் பொழுது உள்ளே ஒருவரும் வெளியே ஒருவரும் நின்று கொண்டு சம்பாஷணை செய்து பார்த்தால் இது நன்கு விளங்கும். இங்ஙனம் வஸ்துக்களை, இது நல்ல ஒலி வியாபக வஸ்து, இதுகொஞ்சம் மட்டம், இது இன்னும்மட்டம் என்று வரிசையாய்ச் சொல்லலாம்.

வஸ்துக்களின்—முக்கியமாய் வாயு பதார்த்தங்களின்—ஒலி வியாபக சக்தியானது அவற்றின் கனம், சீதோஷ்ணம், ஈரம் (Dampness) முதலியவற்றைப் பொறுத்தது.

ஒலி வியாபகத்துக்கு நேரம் பிடிக்கும்:—ஒரு ஒலியானது உற்பத்தியானதும் உடன் உடனேயே பல விடங்களிலும் கேட்பதில்லை. இது பொய் போல் தோன்றும். ஆனால் உற்பத்தியாய் கொஞ்ச நேரமான பிறகே கேட்கு மென்று எளிதில் நிரூபிக்கலாம். ஆற்றில் ஒருவன் வஸ்திரம் தப்பிக் கொண்டிருக்கும்போது நாம் சற்று தூரத்தி லிருந்து கவனித்தால் வஸ்திரம் கல்லில் அடிபடுவதைப் பார்த்துச் சிறிது நேரத்துக்குப் பிறகே அதன் ஒலியைக் கேட்கிறோம். அடி

யைப் பார்ப்பதற்கும், ஒலியைக் கேட்பதற்கும் இடையே யுள்ள நேரமானது நாம் இருக்கும் இடத்தின் தூரத்தைப் பொறுத்தது. நாம் தூரத்தை அதிகப்படுத்தினால் அந் நேரமும் அதிக மாகும். இன்னும், ஒருவன் ஒரு பீரங்கி சுடும் பொழுது நாம் சற்று தூரத்தில் நின்று கவனித்தால், புகை கிளம்பிச் சற்று நேரமான பிறகே வெடி யொலி கேட்கிறது.

ஆதலின் ஒலியின் வேக மென்ன? எல்லா ஒலிகளும் ஒரே வேகத்துடன் செல்லுமா? ஒலிகள் சில வஸ்துக்களில் அதிக வேகமாகவும் சிலவற்றில் வேகக் குறைவாகவும் செல்லுகின்றனவா? என்ற விஷயங்களை ஆராயவேண்டும்.

வாந்தி பேதி*

Cholera.

[ம-ா-ா-ஸ்ரீ P. N. அப்புஸ்வாமி ஐயர், B.A., B.L., தொகுத்தெழுதியது.]

இவ் விஷயத்தைப் பற்றிப் பேச ஆரம்பிக்கும்பொழுதே நான் உங்களுக்குத் தெளிவாய்க் கூறவேண்டிய தொன்றுண்டு. அஃதாவது இந் நோயின் வாய்ப்படுவது மிகக் கேவலமான முழு முட்டாள்தனம்: இதனைக் காட்டிலும் கேவலமெனக் கருதத்தக்கது வேறு ஒன்று உண்டாயின் அஃது இந்த நோய்க்குள்ளாய பின்பு இதனின்று இறத்தலே யாகும் என்பதே. ஏனெனில் இந் நோயைக் கிட்டவே அணுக வொட்டாமல் தடுப்பதற்குரிய உபாயங்கள் மிகவும் எளிதானவை. நோயுற்ற பின்னர் குணமடைதற் பொருட்டு அனுசரிக்க வேண்டிய வைத்திய முறையும் அவ்வாறே மிக எளிதானது. மேலும் கைம்மேல் பலன் தரத்தக்கது.

வாந்தி பேதி நோயானது மிகவும் நுண்ணிய நோய் வித்துகளால் விளைக்கப்படுகிறதெனத் துணியப்படுகிறது. பூதக் கண்ணாடி அல்லது நுண்மை நோக்கி வாயிலாக இந் நோய் வித்தை நோக்குங்காலத்து இது கமா (,) வென்னும் கால்

[*இது ஸெண்ட் ஜான் நடை மருத்துவ சபையாரின் ஆதரவின் கீழ் நடந்தேறிய பிரசங்க விஷயம் லெப்டினன்ட் கர்னல் R. ப்ரவுன் துரையவர்களால் செய்யப்பட்டது. அப்போது கனம் வர் அலெக்ஸாண்டர் கார்ட்யூ துரை யவர்கள் தலைமை ஸ்தானம் வகித்தனர்.]

மாத்திரைப் புள்ளி வடிவ முடையதாகத் தோற்றுகிறது. இது நமது கண்ணுக்குத் துணைக் கருவி யின்றிப் புலப்படக் கூடிய தல்ல. இஃது உலகெங்கும் பரவக் கூடியது, மக்களின் தரம், சாதி, கொள்கை முதலியனவற்றை சிறிதும் பொருட் படுத்தாதது: இதனிடம் சிக்கிக் கொண்டவரைச் சற்றே னும் பக்ஷபாதமின்றி நடத்துவது.

இத் தகைய குணம் வாய்ந்த வாந்தி பேதி நோய்வித்து பிழைத்துவாழ்ந்து வளர்ந்து நோய் விளைவிக்கும் வலியோ டிருக்கவேண்டு மாயின் அதற்கு ஈரம் இன்றியமையாதது. அதன் இருப்பிடம் பெரும்பாலும் தண்ணீரே. ஆதலால், தண்ணீ ரானது நமது வெறும் கண்களுக்கு யாதொரு மாசும் இல்லாத தாகத் தோன்றிய போதினும் அதில் இந் நுண்ணிய நோய் வித்துக்கள் நிறைந்திருக்கக் கூடும். இவை தாமாகவே வளர்ந்து இடம் விட்டு இடம் செல்லச் சக்தி யற்றி ருப்பதால் மனிதர் ஈக்கள், எறும்புகள், கரப்பான் பூச்சிகள் முதலியன வற்றைத் தம் வாகனங்களாய் அமர்த்திக் கொள்கின்றன. மனித வருக்கத்தினரின் உமிழ் நீரை அசுத்தப் படுத்தி அவர் இடம் விட்டு இடம் செல்லும்போது தாமும் உடன் பெயர்ந்து எங்கும் நோய் விளைக்க ஏதுவாகின்றன. ஈ முதலிய ஜந்துக் களோ வெனில் வாந்தி பேதியால் பாதிக்கப்பட்ட வஸ்துக் களை வெவ்வேறு விதமாகத் தீண்டிப் பிறகு சந்தைகளிலும் வீடுகளிலும் உள்ள உணவுப்பொருள்களின் மீது உட்கார்ந்து அவற்றையும் அசுத்தப் படுத்துகின்றன. இந் நோயின் வாக னங்கள் ஆறு வகை யென்பர்: அவை விரல்கள், ஈக்கள், தண்ணீர், அழுக்கு, வாந்தி, மலம் எனப்படுவன.

இந் நோய் வித்துக்கள் வாயின் வழி உட்சென்று புளிப் புத் திரவம் நிறைந்த வயிற்றை அரிதில் கடந்து சென்று

சிறு குடலில் தங்கிப் பெருகி வாழ்ந்து நோய் விளைவிக்கின்றன.

இவ் வியாதியின் போக்கு யாவரும் அறிந்த வண்ணம் பிற் கூறிய வாறும் :—

முதலில் ஏராளமாய், நெகிழ்ந்த மலப்போக்குக்கள் ஒன்றை யொன்று துரிதமாய்ப் பின் தொடர்ந்து வருவன. இத் தருணம் வயிற்று நோவும் உண்டாகலாம். பின்பு இவ் வெளிப்போக்கின் மலத்தன்மை மாறி, அது அரிசிக் கஞ்சி போல் திரவமாயும் நிறமற்றும் ஆடை படிந்தது போலுமிருக்கும். நோயாளியினின்று வெளிச் செல்லும் நீர் படிக் கணக்காகத்தான். இதே சமயத்தில் வாந்தியும் உண்டாகும், இதுவும் தாராளமாய்த்தான். முதலில் வெளி வருவது உட் கொண்ட உணவு முதலியன. பின்பு மலமென வெளிவரும் அரிசிக் கஞ்சியைப் போன்ற திரவத்தைப் போலவே வாயின் வழியும் வெளிவரும். வலிப்புகள் ஏற்படும்: கை கால்கள் இழுத்துக் கொள்ளும்: வெகு சீக்கிரம் அசதி உண்டாகும். உடல் தளர்ந்து, கன்னம் ஒட்டி, கண் இடுங்கி, தேகம் குளிர்ந்து போகும். பிறகு ஒரு வியர்வையும் உண்டாகின்றது. சுவாசம் குளிர்ந்து, குரல் மெலிந்து, நாடி அயர்ந்து ஒடுங்கிப் போகிறது. நோயாளி அமைதி யின்றி, புரண்டு கைகளை இங்கு மங்கும் அசைத்து, கடுந் தாகமும், நெஞ்சில் ஓர் எரிச்சலும், எங்கும திமிரும், இருக்கின்றன வென்பான். பிறகு தேகம் வலியற்று வாடி, மரணம் சம்பவிக்கிறது.

இந் நோய் அணுகாது தடுத்தற் குரிய உபாயம் எளிதென்றேன். அதை யாவருமே கஷ்டமின்றித் தேடிக் கொள்ளலாம். இந்நோய் வித்துக்கள் சூடு பொறுக்கமாட்டா; அவை சூட்டால் மடிவன. ஆதலால் இப் படு நோய் சுற்றுப்

புறங்களில் இருந்தாலுமே இல்லாவிடினுமே நாம் பருகும் பாலையும் நீரையும் கொதிக்கவைத்துப் பின்னும் நோய்வித்துக்கள் அவற்றை அணுகாது காத்து உபயோகிப்பதே முறை. வீட்டின் அசுத்தங்களை அப்போதைக்கப்போது 'ஒட்ட' அகற்றுவ தவசியம். இந் நோய் பரவி யிருக்கும் இடங்களில் பொதுவாய்க் கிணற்று நீரை உபயோகிக்கா திருத்தலே சரி. சுகாதார இலாகா உத்தியோகஸ்தர்கள் அடிக்கடி பரிசோதித்து ஒப்புக்கொண்ட குறிப்பிட்ட சில கிணறுகளிலிருந்து மட்டுமே நீர் மொண்டு கொள்ளுதல் தகுதி.

உற்சவங்களுக் கென்று ஜனங்கள் கூடும் பல விடங்களில் இந் நோய் தோன்றுவ துண்டு. அப்பொழுது அரசாங்கத்தார் வைத்திய முறை தெரிந்த சிலரை அங்கங்கு அனுப்பி நோயாளிகளுக் கென்று தனிமையாய்க் குடிசைகள் முதலியன கட்டியும், அவர்களுக்குச் சிகிச்சை செய்தும் இந் நோய் பரவ வொட்டாது தடுக்க முயலுகிறார்கள். அவ் விடங்களில் முன்னமே வேலை பெற்று அமர்ந்திருக்கும் வைத்தியர்கள் இப்படி அனுப்பப்பட்ட இவர்க்குத் தங்களா லியன்றவரை சௌகரியங்கள் இயற்றி வைப்பது அவசியம். அன்றேல், இவரே அப் படுநோய்க் கிரையாயினும் ஆவர். பொதுவாகவே இவர்களோடு ஜனங்கள் ஒத்து உழைத்தல் வேண்டும். இவர்களுக்குப் பண உதவி செய்தல் வேண்டும். இவர்களின் வேலை காரணமான சௌகரியங்கள் அனைத்தையும் அமைத்தல் வேண்டும்.

இனி இந் நோயாளிகளுக்குச் செய்யவேண்டிய வைத்திய முறையைப் பற்றிச் சிறிது கூறுகிறேன். சாதாரணமாக இந்நோயால் உண்டாகும் வயிற்றுப் போக்கை நிறுத்துவதற்கு க்ளோரோடைன்(Chlorodyne)காம்பரடைன் (Camphorodyne) என்னும் மருந்துகளை குடிக்கக் கொடுப்பது வழக்கமா

யிருக்கிறது. இவ்வாறு செய்வது தவறு. ஏனெனில் இந்த ஔஷதங்களில் அபின் சேர்க்கப்பட்டிருக்கிறது. வியாதி குணப்படக் கூடிய விடங்களிலும் கூட இம் மருந்துகளிலுள்ள அபினால் நஞ்சுற்று நோயாளி இறத்தல் கூடும். ஆட்ரபீன் (Atropine) என்னும் மருந்தைக் குடிக்கக் கொடுக்கலாம்.

இவ் விஷயம் எப்படி யிருந்தாலுமே, இந் நோய் கண்டவுடன் அநுசரிக்க வேண்டிய மிகவும் முக்கியமான சிகிச்சை முறை என்ன வென்றால் அருகிலுள்ள ஆசுப்பத்திரிக்கு உடனே செல்லவேண்டு மென்பதே. அங்கே புள்ள வைத்தியன் செய்யும் சிகிச்சை பலன் தரக்கூடியது. ஆகையால் அங்கு செல்வதால் ஒருவன் இந் நோயின் கொடுமையைக் குறைத்து எளிதில் சாகாமல் பிழைத்துக் கொள்ளக்கூடும்.

இவ்வாறு செய்வது சாத்தியமின்றி, வைத்தியனுக்காகக் காத்திருக்க நேரிடின், பொடாசியம் பெர் மாங்கனேட் (Potassium Permanganate) என்னும்ஊதா (Violet) நிறமான மாத்திரை யொன்றைச் சாப்பிடவேண்டும். அஃது எப்படி உட்கொள்ளப்படவேண்டு மென்பது அம் மாத்திரைகளடங்கிய சீசாவில் குறிக்கப்பட்டிருக்கும். அம் மாத்திரைகள் கிடைக்காவிட்டால் இம் மருந்து கரைந்த திரவத்தை உபயோகிக்கலாம். [மருந்துக் கடைகளில் இம் மருந்து மாத்திரைகளாகவும் பொடியாகவும், கரைந்த திரவமாகவும் விற்கும். இத் திரவத்தை காண்டிஸ் ப்ளுயிட் (Condys Fluid) என்பர் இம் மருந்தை பேர்மாங்கனேட் ஆப் போடாஷ் (Permanganate of Potash) என்றும் சொல்வதுண்டு.]

நோயாளிக்கு எவ்விதமான ஆகாரமும் கொடுக்கக் கூடாது. அவனுக்குத் தாகம் மிகுதிப்படின் சிறிது பொடாசியம் பெர்மாங்கனேட் திரவத்தை யாவது சிறிது எலுமிச்சம் பழச் சாற்றையாவது குடிக்கக் கொடுக்கலாம்.

நோயாளிக்கு வேண்டிய சௌகரியங்களையும், சிகிச்சையையும் செய்ய இன்றியமையாதவர் மட்டிலுமே அவன் பக்கம் அணுகல் வேண்டும். மற்றவர் யாராயினுமே அவனண்டையில் செல்லாதிருத்தல் நலம். அவனுக்கு உதவிபுரிவோர் யாவருமே நோயுற்ற அவ்வீட்டில் எதையும் உண்ணவும் பருகவும் கூடாது. இவ்வொழுக்கத்தை விரதமாகப்பேணுவது அத்தியாவசியம்.

நோயாளியின் பக்கத்தில் ஒரு விதமான அசுத்தமும் செய்யக்கூடாது. அது சுகாதார விதிகளோடு ஒவ்வாது. மேலும் நோய் வித்துக்கள் தங்கி யிருத்தற்கு அஃது இடமாகும்.

இந் நோயைக் குணப்படுத்த இப்பொழுது ஒரு புதிய முறை கையாளப்பட்டு வருகிறது. அஃதென்னவெனில் உப்புக் கரைந்த திரவத்தை நோயாளியின் தேகத்திலுள்ள இரத்தத்தோடு கலப்பதின் பொருட்டு ஓர் ஊசிக்குழாயின்வழி உட்செலுத்துவதே. இரத்தத்துக்கு இன்றியமையாத உப்பையும் நீரையும் அதனோடு சேர்க்கும் இவ்வழி கைகண்ட பலனை அளித்துவருகிறது. [உதிரத்திலுள்ள நீர் மலமாயும் வாந்தியாயும் வெளிச் சென்றுவிடுவதால் வரவர இரத்தம் வறண்டு ஓடும்.தன்மையை இழக்கிறதென்றும், அவ் விரத்தம் பாய்ந்து வளர்ந்து தழைக்கும், தேகத்திலுள்ள ஒவ்வொரு அங்கமும் உணவின்றி வாடி மெலிகிறதென்றும் அதனாலேயே படிப்படியாக உடல் வலி குன்றி நோயாளி மடிகிறானென்றும் துணியப்படுகிறது.]

துரைத்தனத்தார் இந் நோய் பரவாது தடுத்தற்குப் படும்பாடனைத்தும் குடிகள் அவருடன் ஒத்து உழைத்தாலன்றி ஒரு பொழுதும் பயன் பெறா. ஆதலால் நீங்கள் யாவரும் அவரோடு கைகோத்து உழைத்து இப்படி நோயை நீக்க முயலவேண்டு மென்பதே என் வேண்டுகோள்.

நபோலியன்.

Napoleon

ஸ்ரீமான் T. R. ராஜகோபாலையர் எழுதியது.

தேக சக்தி, மனோசக்தி, அருட் சக்தி என்பவைகள் ஒரே வஸ்துவின் வெளித் தோற்றங்க ளாதலால், அவைகள் சமப் புகழ்ச்சிக்கு உரித்தானவை. மேலும், அவைகள் ஒன்றற் கொன்று ஆதாரமாக நின்று உதவுவன. தேக சக்தி பொருந்தியவன் வீரனாகவும், மனோசக்தி மிகுந்தவன் கலைஞனாகவும் அருட்சக்தி நிரம்ப உடையவன் தத்வக்ஞனாகவும் விளங்குகின்றான். மாந்தரின் வளர்ச்சிக்கும் நாகரிகக் கிளர்ச்சிக்கும் அறிவின் விசாலத்திற்கும் கலைஞர்களும் ஞானிகளும் பிரதான மாவதுபோல், புஜ பலம் பொருந்திய சேனாதிபதிகளும், நுண்ணறிவும், விசுவாசமும், அன்பும் தைரியமும் வாய்க்கப் பெற்ற செங்கோல் அரசர்களும் அவ் வளர்ச்சிக்கு இன்றியமையாதவர்களாகிறார்கள். மாந்தர்க்கு இயல்பான மூர்க்க குணத்தையும் மடமையும் களைந்து, அவர்களுடைய மனதைச் சுத்திசெய்த பின்னன்றோ தத்வக்ஞானிகளால் தெரிவிக்கப்படும் அரிய பெரிய விஷயங்கள் அவர்கள் உள்ளத்திற் பதிந்து அவர்களை நன்னடக்கையராகச் செய்யக்கூடும். நாடெங்கும் சமாதானத்தை நிலைநிறுத்தி வித்வசிரோமணிகளின் லக்ஷியங்களை நாலா பக்கங்களிலும் பரவச்செய்து, அவைகளை யாவரும் பின்பற்றி ஒழுகி இன்பு

ற்றிருக்க உதவுவோர்கள் போர் வீரர்களும், ராஜ்ஜியாதிபதிகளுமே யாகிறார்கள்.

போரில் புறங்காட்டி ஓடாதவனும் பார்ப்பவர் மனத்தைக் கவரத்தக்கதான கம்பீரத் தோற்றமும், எப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் சலிக்காத தைரியமும், சிங்கத்திற் கொப்பான பலமும் இளைப்படையாமல் எவ்வளவு தேகப் பிரயாசையும் தாங்கவல்ல திட சரீரமும், பெருந்தகைமையும், பிறர் குற்றத்தைப் பொருத் தருளும் குணமும் உடையர் ஆயினும், பொருத்தற் கியலாத பெருங் குற்றங் கண்டவிடத்தில், தயாள குணம் தவிர்ந்து வன்னெஞ்சு கொண்டு ஒறுத்தல் செய்தற்கு ஒரு சிறிதும் பின்னிடாமையும், கங்கு கரை யில்லா உதார குணமும், பூரணமாகப் பெற்றவரே சிறந்த தளகர்த்தராக விளங்கக் கூடியவர். இச் சீரிய குண வொழுக்கங்களை நிரம்பப் பெற்றவர் நமது நபோலியன்.

போர் என்பது ஒரு பெருஞ் சூதாட்டத்தை ஒத்ததாகும். போர்கள் சரீரத்தைத் திடப்படுத்தி, ஐம்புலன்களையும் ஒழுங்குப்படுத்தி, மன வலிமையைப் பெருக்கி அபாயங்களினின்று தப்பிப் பிழைப்பதற் குரிய சூழ்ச்சிகளை ஊட்டுவித்து, மூர்க்கர்களை யடக்கி, இன்னு மிவை போன்ற ஏனைய நன்மைகளைப் பயப்பதானாலும், வெற்றியின் மகிழ்ச்சியும், தோல்வியின் சோகமும், தந்திரம் நம்பிக்கை அகங்காரம் பச்சாத்தாபம் முதலானவைகளின் ஆர்ப்பாடங்களும், இறந்தோரின் பயங்கரத் தோற்றமும், மரிப்போரின் மனக் கொந்தளிப்பும் பிழைத்திருப்பவர்களின் வருத்தமும், கவலையும் நிறைந்ததாகும் யுத்த பூமி யென்பது. சூதாட்டத்தில் எவனும் தன் வாணாள் முழுவதையும் கழித்துக் களிப்புற முடியாதவாறு போல், எத்தகைய சூரனும் பெரும் சூதாட்டமாகிய யுத்தத்

தில் தலையிட்டு, தன் ஜீவ காலத்தைப் போக்க முடியாது. அவித்தையையும் தீமையையும் போக்கி, விவேகத்தையும், நன்மையையும் இப் பூவுலகின் மீது வியாபிக்கச் செய்து நிலை நிறுத்தும் போர்கள் சிலாகிக்கத் தக்கவையே; இத் தகைய போர்கள் மிக்க சொல்பமானவை. ஆனால், யுத்தங்களின் பெரும் பான்மைக்கும் முக்கிய காரணம் செருக்கும் பேராசையுமே. பேராசையினால் பீடிக்கப்பட்டு, தள்ளற் பாலதை மேற்கொண்டு, கொள்ளவேண்டியவைகளை வெறுத்து அல்லது பழித்து வருபவர்கள் நாளடைவில் படவேண்டிவரும். இப் புவியின்மீது தோன்றி வளரும் தீமைகளுக் கெல்லாம் தாயாக விளங்குவது பேராசையே. பெண்ணாசை மிகுந்தவன் காமி; பொன்னாசைநிறைந்தவன் உலோபி, இவைகளுடன் மண்ணாசையு முடையவன் கொடுங்கோன் மன்னவனாகிறான். இவ்வாசைப் பேயினாற் குடிகொள்ளப்பட்டு வரும் சாமான்னியனே நாட்டிற்கு விரோதியும், மாந்தர்க்குத் துரோகியுமானவன். இத் தீர்குணம் ஒரு பெரிய அரசனிட மிருக்கு மாயின் இவ் வுலகின் அழிவுக்கு வேறு யாது வேண்டும்? ஆயினும், தேவர்களின் மன வாட்டமும், இறந்தோரின் வினைப் பயன்களும், ஜீவித்திருப்பவர்களின் சாபமும், துக்கமும், காலனின் களிப்புமே நாளுக்கு நாள் அதிகரித்து, இவைகளுக்குக் காரணமான பாதகனை வாடி மடியச் செய்கின்றன. எத்தகைய அரசன், அல்லது தளகர்த்தனும் அநியாயமாய் பற் பல போர்கள் புரியத் தலைப்படுவானாயின் நாளடைவில் அவனுடைய செல்வமும் சிறப்பும் குன்றி, ஜனங்களுக்கு அவன் மீது வெறுப்புத் தோன்றும். மேலும் அவன் யாவராலும் இகழ்ந்து கைவிடப்படுவான். இப் பேருண்மைகள் நபோலியனது சரிதத்தால் நன்கு விளக்கப்படுவன.

கார்ஸிகாவிலுள்ள [1] (Corsica) அயாச்சியோ (Ajaccio) என்ற இடத்தில் 1769-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 15-ந் தேதியில் வியாயவாதியான சார்லெஸ் போனபார்ட் (Charles Buonarparte) என்பவனுக்கும் சௌந்தரியமும் மன உறுதியும் பூரணமாகப் பெற்றுள்ள மேரியா லெட்டிஷியா ரொமாலினோ என்றவளுக்கும் பிறந்தவர் நமது நபோலியன்.

"விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்ற பழமொழிக்கிணங்க, விளையாட்டுச் சண்டை செய்வதும், பேரிகையடிப்பதும், பொம்மைக் கோட்டைகள் கட்டிப் பார்ப்பதுமே இவரது இளமைப் பருவ விளையாட்டுகள். பின், யுத்த முறைகள் கற்பிக்கப்படும் பள்ளிக்குச் சென்று படித்து வருகையில், வீண் ஆடம்பரங்களில் தன் மனத்தைச் செலுத்தாது, தேசச் சரிதங்களையும் ஆதிகாலத்திய வீர தீரர்களின் ஜீவ சரிதங்களையும் கணித சாஸ்திரத்தையும் யுத்த முறைமைகளையும் நன்கு கற்றுணர்ந்தார்.

முதலில் ஆஸ்திரியராலும் பின் பிரெஞ்சுக்காரர்களாலும் ஆளப்பட்டுவந்த தன்னுடைய தாயகமான கார்ஸிகாவை அவர்கள் ஆதீனத்தினின்று விடுவிக்க நபோலியனும் வேறொரு மகானும் பாடுபட்டதையும்; இவர் மாணாக்கராயிருந்த பொழுது இவர்க்கு நேர்ந்த கஷ்டங்களையும்; பின், சிற் சில கலகங்களை அடக்க இவர் நியமிக்கப்பட்டு, அவைகளை இவர் அடக்கிய விவரங்களையும்; 1796-ம் வருஷம் வசந்தகாலத்தில் ஜோஸபைன் பென்ஹார்னய் (Josephine Benharnais) என்றவளை மணந்ததையும்; பின் ராஜாங்கத்தினர்க்கு இவர்

1, மத்தியதரைக் கடலிலுள்ள ஒரு தீவு, இது பிரான்சுக்கும் இத்தலிக்கும் நடுவாக உள்ளது.—ப-ர்.

மீது நன்னம்பிக்கை பிறந்து வளர்ந்ததையும் அவர்கள் இவ ரைச் சிறப்பித்து வந்ததையும்; ஒருபெருஞ் சேனையுடன் ஆல் ப்ஸ்'[1] (Alps)மலைத்தொடரைக் கடந்து இத்தாலியா தேசத் தை எதிர்த்து அத் தேசத்தினரை வென்று ப்ரென்சுக்காரர் ஆட்சிக்குள் கொணர்ந்ததையும் பின் ஆஸ்த்ரியா (Austria) ஜெர்மனி, (Germany) எகிப்து, (Egypt) ருஷியா, (Russia) ஸ்பெயின் (Spain) முதலான தேசங்களின்மேல் படை யெடுத்துச் சென்று அவ் வரசர்களைத் தன் வசப்படுத்தியதை யும்; இப் போர்களில் இவர் தெரிவித்த மதியூகத்தையும், உபாயங்களையும் இக் காரணங்களையிட்டு ப்ரென்சுக்காரர்கள் இவரை 1799-ம் வருஷத்தில் நீதிபதியாக (Consul) நியமி த்ததையும் பின் 1804-ம்வருஷத்தில் அரசனாக மகுடாபிஷே கஞ் செய்ததையும்; புத்திரப் பேறு பெறும் பொருட்டு மீண் டும் 1810-ம் வருடம் ஏப்ரல் மாதத்தில் மேரியா லூயிஸா (Maria Louisa) ஆஸ்திரிய அரச குமாரியை விவாகஞ் செய்து 1811-ம் வருஷத்தில் இவர்களுக்கு ஓர் ஆண் குழந் தை பிறந்ததையும்; ஐரோப்பிய அரசர்க ளெல்லாருடனும் பன் முறை சண்டை செய்து அவர்களைத் தோற்கடித்து வந்த மையால் அவர்கள் வெகுண்டு பெருஞ்சேனைகளைத் திரட்டிப் பிரான்சு தேசத்தை முற்றுகை போட்டு வென்று, நபோலிய னைப்பிடித்து எல்பா[2] (Elba) என்றதீவுக்கு அனுப்பியதையும் பின் 1815-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 25-ந்தேதி இராத்திரி

---

1. இமய மலைத்தொடர் ஆசியாவின் முதுகெலும்பாவது போல் இம் மலைத்தொடர் ஐரோப்பாவின் முதுகெலும்பாகும். இதனின் றே ஐரோப்பாவி லுள்ள முக்கிய நதிகள் கிளம்புகின்றன இது இட் டலி தேசத்தின் வட எல்லைச் சுவராகும்.—ப. ர்.

2. இதுவும் மத்தியதரைக் கடலிலுள்ள சிறுதீவு. மேற்கூறிய கார் ஸிகாவுக்கும் இட்டலி தேசத்துக்கும் நடுவிலுள்ளது.

யில் இவர் அவ்விடத்தினின்று தப்பி வந்ததையும் பின் சைனியங்களைத் திரட்டி ஐரோப்பியமன்னவர்களெல்லாரையுமெதிர்த்து கடைசியில் வாடர்லூ[1](Waterloo) சண்டையில், வெல்லிங்டன், (Wellington) ப்ளுசெர்[2](Blucher) என்றசேனாதிபதிகளால் ஜயிக்கப்பட்டு ஆங்கிலேயர் கைக்குள்ளகப்பட்டு 1815-ம் வருஷக் கடைசியில் செய்யின்ட் ஹெலெனா[3] என்ற தீவுக்குக் கைதியாக அனுப்பப்பட்டதையும் இவ் விடத்தில் இவரைக் காத்துவந்த ஆங்கில துரைத்தனத்தார் இவரைப் பலவிதங்களில் மானபங்கஞ்செய்து இமிசித்ததையும் அத் தீவிலிருந்துவரும் நாளில் இவர் தன் சிநேகிதர்களுடன் செய்த நற் சம்பாஷணைகளையும் 1821-ம் வருடம் மே மாதம் 5-ந் தேதியில் இவரைப் பன்னெடுநாளாய் வாதித்து வந்த வயிற்றுப் புண் (Cancer in the stomach) அதிகரித்து இவர் ஆயுளை முடித்ததையும், விரிவஞ்சி எழுதாது விடுத்தனம்.

ஐரோப்பாக் கண்டத்திலுள்ள மகாணங்களை யெல்லாம் தன் சொந்த வீடுகள் போல் பாவித்துத் தன் இஷ்டப்படி அவைகளை உயர்த்தித் தாழ்த்தி அழித்து அத் தேசாதிபதிகளை மனங் கலங்கி வருந்தச் செய்த கிராதகனெனவும்; தன் சேனைகளின் கஷ்ட நஷ்டங்களைக் கொஞ்சமேனும் பொருட்படுத்தாது தன் உள்ளக் கருத்து நிறைபெறும் வரையிலும் அவர்களை விலங்குகள் போல் ஆட்டுவித்த துரான்மாவெனவும் கூக்குரலிடும் அறியாப் பிள்ளையும் இவனுடைய பெயரைக் கேட்ட மாத்திரத்தில் மௌனமுற்றிருக்கும் படிக்கும்

1. ஆங்கிலச்சேனாதிபதி. 2. ஜெர்மானியச் சேனாதிபதி. 3. ஆப்பிரிக்கா கண்டத்தைச் சேர்ந்த தீவு; அட்லான்டிக் மகா சமுத்திரத்திலுள்ளது. இதிலிருந்து மிகக்கிட்டமானபூமி 1000 மயிலுக்கப்பாலுள்ளது.—ப. ர.—

ஐரோப்பிய மன்னவர்க ளெல்லாரும் திகைத்து வாடி வதங்கும் படிக்கும் செய்த வீரன் எனவும்; பொல்லாதவனும் பாதகனும்பயன்படாதவனும், பொய்யனும், மனவொடுக்கமும் பொறுமையும் எள்ளளவேனு மில்லாத அற்பனும்; வஞ்சகனும், கபடனுமான புத்தியீன னெனவும்; போரில் அட்டிலாவையும்[1] (Attila) ராஜாங்க நிர்வாகத்தில் போர்ஜியாவையும் (Borgia) சுகபோகவிச்சைகளிலும் குரூர நடைத்தைகளிலும் நீரோ[3]வையும் (Nero) ஒத்த கீழ் மகனெனவும் இவரைப் பழிப்பார் ஒரு சாரார்.

எக்காலத்தினரும், எத்தேசத்தினரும் கண்டுங்கேட்டுமிராத ப்ரேன்சுக் கலகத்தை (French Revolution) யடக்கி அக்கலகத்தின் காரணத்தால் சீர்கெட்டுத் தத்தளித்து விழாநின்ற ப்ரான்சு தேசத்தை ஒழுங்குபடுத்தி அதை ஓர் பெரிய மாகாணமாக மாற்றிய மன்னவர் மன்ன னெனவும் அஞ்ஞானத்தினாலும் நாஸ்திகத்தினாலும்கவரப்பட்டு கொலை, களவு, கட்காமக் குரோதாதிகளில் உழன்று தம் வாணாளை வீணாளாகக் கழித்து வந்த அத்தேசத்தினரை அறிஞர்களாகவும் அறந்தங்கியவர்களாகவும் மாற்ற முயன்ற பெரியோன் எனவும் மறைந்து மடிந்து கொண்டிருந்த கிறிஸ்துவ மதத்தை முன் கொணர்ந்து சிறப்புற்று விளங்கச் செய்த மகா னெனவும்; பல நூற்றாண்டுகள் பரியந்தம் பிரபல மாயிருந்து, பிரஜைகளிற்

1. ஐந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பா முழுவதிலும் திக்விஜயம் செய்து ரோமராஜ்ஜியத்தைக் கலக்கிய ஹூண அரசன், 2. ஆறாவது அலெக்ஸாண்டர் என்னும் ரோம குருவின் மகன், தீக்குணமே இவ்வுரு எனக்கூறலாகும் தன்மையன், இவன் 'பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் இட்டலி தேசத்திலுள்ள சில நாடுகளின் சிற்றரசன் 3. கி. பி. முதலாவது நூற்றாண்டிலுள்ள ஒரு ரோம சக்கிரவர்த்தி: நன்மையைக் கனவிலும் நினையாதவன்,—ப. ர்.

பெரும்பான்மையரின் மனவமைதியையும் உற்சாகத்தையும் நசிக்கச் செய்த மான்யமுறையைப் போக்கி (Feudal system), சீமான்களின் மிதமீறிய செல்வாக்கைக் குறைத்து, கொடுங்கோல் அரசர்களின் கொட்டத்தை யடக்கிய பேருபகாரி எனவும்; தன் சேனைகளின் நன்னம்பிக்கையையும், அன்பையும் பயத்தையும் சம்பாதித்துப் பாதுகாத்த உத்தமனெனவும்; தெய்வ பக்தியும், நற்குண நல்லொழுக்கங்களும், செய்ந்நன்றியறிவுமுடைய சத்புருஷனெனவும்; செங்கோன் முறைமையும், தளகர்த்தற்குரிய தகுகணுண்மையும், தன் எதிரிகளின் வலியையும் தன் பக்க லத்தையும் நன்கு ஆராய்ந்தறிந்து, இறுதியில் ஜயமேயடைவதற்கான வழியைத் தெளிவாக ஊகித்தறிந்து, சமயத்திற்குத் தக்கவாறு தன் ஏற்பாடுகளை மாற்றிக் குறுக்கிப் பெருக்கித் திருத்தித் தன் எதிரிகள் எத்தகையராயினும் மனஞ்சலிக்கும்படிப் போர்கள் நடாத்திய வீரன் எனவும்; தன் சத்துருக்களின் தொகையும், வீரியமும் எவ்வளவாயினும் அதைக் கவனித்துப் பார்த்தறிந்து, அவர்களைப் பிரித்துத் தனித்தனியாகத் தன்னுடைய புஜபல பராக்கிரமம் பொருந்திய சூரர்களால் தோற்றோடச் செய்வதற்கான சாமர்த்தியமுடையனெனவும்; கைக்கொண்ட காரியம் பலிக்கும் வரையிலும் அன்ன பானுதிகளையும் உறக்கத்தையும் முற்றத் துறந்து, தன் சேனைத் தலைவர்களும், நட்பினரும், இதர உத்தியோகஸ்தர்களும் வியப்புறும்படி ஊக வூக்கங்களுடன் உழைத்த மாண்பின னெனவும்; வியூகம் வகுக்கும் வித்தையில் (strategy) இவனுக்கு இணையாக நிற்க வல்லவர் ஒருவருமில்லை யெனவும் மகிழ்ந்து புகழ்ந்து கூறுவார் மற்றொரு சாரார்.

" வாட்டமில் அருளும், கோட்டமில் குணமும்,
அசையா நிலையும், நசையா மனமும்,
வெகுளாப் பண்பும், விடாப் பேரன்பும்,

சர்வ சக்தியும்'' நிறைந்தவர் கடவுள் ஒருவரே. காலம், இடம் என்ற பொய்ப்பொருள்களின் வசப்பட்டிருக்கும் மக்கள் யாக்கையைக் கொண்டவரிடம் சிற் சில குற்றங் குறைகள் இருந்து கொண்டே வரும். ஆதலால், இத்தகையவரைத் தூற்றுதல் மதியீனமாகும். இவர் போன்றவரிடம் காணப்படும் கெட்ட நடத்தைகளைக் கவனிக்காது ஒதுக்கி, அவர்களிடம் ஏதேனும் நற்குண வொழுக்கங்களிருக்கு மாயின், அவைகளைச் செம்மையாக அறிந்து பின்பற்றி நடக்க முயலவேண்டுமென்பார் இன்னு மோர் சாரார்.

இவ் வுலகில் இதுகாறும் அவதரித்த யுத்தவீரர் நால்வரில்—மற்றைய மூவர் அலெக்ஸாந்தர்—கி. மு. 356—323; ஹானிபால்—கி. மு. 247—183; ஜூலியஸ் ஸீஸர்—கி. மு. 100—43 —ஒருவர் நமது நபோலியன். தளர்ச்சியடையாத தேகவன்மையிலும், கபடோபாயத் தேர்ச்சியிலும், போர்க்களத்தில் நிகழக் கூடியவைகளை யெல்லாம் முன்னறிந்து தக்கபடி ஆயத்தப்படுவதிலும், எத்தகைய இடையூறு இடுக்கண்களையும் தன் நுட்ப புத்தியினுலும் பொறுமையினுலும், விடா முயற்சியினுலும் அகற்றி, நொடிப்பொழுதில் ஆயிரக் கணக்கான பட்டாளர்களைச் சேகரித்து யுத்தஞ் செய்வதற்குரிய புத்தி சாதுரியத்திலும் மேற்கூறிய மூவர்க்குப் பின்பு இதுவரையிலும் இவரைத் தவிர வேறெவருமில்லை.

எனினும், எச் சக்திகள் இவரை மேலெழுப்பியனவோ அவைகளே இவர் அளவு கடந்து சென்றவுடன், இவரைத் தாழ்த்தின. அப்ராக்ருத சக்தி (Preternatural energy)

பொருந்தியவராய், யுத்த முறைமையிலும் ராஜ்ஜிய நிர்வாகத்திலும், கற்பனு சக்தியிலும், விஷயங்களின் தாரதம்மியங்களை யும் தோய்ந்து நிதானித்துப் பார்த்தறிந்து செய்வதிலும், ஈகைக் குணத்திலும் ஒப்புயர் வில்லாதவராய் விளங்கியபோதிலும், போர்க் கள்ளைப் பருகி; சித்தங் கலங்கவே இவர் அறநெறி பிறழ நடக்க நேர்ந்தது. நன் னெறி தவறி ஒழுகவே சர்வக்ஞனை கடவுளை அகங்கரித்து இம் மூர்க்கனை உதைத்துத் தள்ளினர். வாட்டர்லூ சண்டையில், இவர் அபஜயமடைந்ததற்குக் காரணம் இவருடைய எதிரிகளின் புஜபலமும், புத்தி வளப்பமுமல்ல; இவருடைய சேனுதிபதிகளில் ஒருவனின் அஜாக்கிரதையும் தாமதமுமல்ல. இவ் வுலகில், அமைதி, க்ஷேமம், இன்பம், நன்மை, ஒற்றுமை என்பன வற்றை நிலைநிறுத்தும் பொருட்டுத் தெய்விக நீதியே மேற்கிளம்பி அதற்குத் தடையாக நின்ற நபோலியனை விலக்கியது,

"அவனருள் அற்றால் அனைவரும் அற்றார்.
அவனருள் உற்றால் அனைவரும் உற்றார்."

என்ற மூதுரைகளின் உண்மையைத் தெளிவாக விளக்குவ தாகும் நபோலியனுடைய ஜீவ சரிதம்,

தில்லைக் கோவிந்தன்

Thillai Govindan

ஒன்பதாவது அதிகாரம்.

(தொடர்ச்சி)

அடுத்த (மார்கழி) ரஜாவில் எனக்குப் புனர் விவாகம் நடந்தது. இதற்குள் என் சிற்றப்பன் அபிப்பிராயங்களை நான் வேண்டுமளவு உட்கொண்டபடியால் விவாகம் என் படிப்புக்குத் தடையாகுமென்று முதலில் ஆக்ஷேபித்தேன். அது தான் நான் முதல் முதல் என் தகப்பனாரின் அபீஷ்டத்தை எதிர்த்து நின்றது. அதனால் அவருக்குச் சற்று வருத்தம். பெண் வீட்டார் ஒரு விதத் தாமதமும் கூடாதென்று நெரித்தார்கள். ஆகவே, என் தாயிடம் என் மனத்தையும் என்னையுமே ஆளவருபவளை நான் முன்னதாகவே பார்க்கவேண்டுமென்று சொன்னேன்.

பெண்ணைச் சேர்ந்தவர்கள் நாட்டியக் காரியை ஆட்டத்திற்கு முன் பார்த்து நிச்சயிப்பது போலிருக்கிறது இது என்று முதலில் சற்று ஆக்ஷேபித்தாரெனினும் கடைசியில் ஒரு விதமாய் ஒப்புக்கொண்டார்கள். அதன்மேல், மணப் பெண்ணைப் பார்க்க அவளூருக்குப் புறப்பட்டேன். இதற்கு முன்னமே ஜாதகங்களை ஒப்பிட்டுப் பொருத்தம் பார்த்தாய்விட்டது. பெண் வீட்டை நான் அடைந்தபோது இரவு சுமார் 9 மணி இருக்கும். ஊரில் மற்றெல்லோரும் ஏற்கனவே தூக்கத்தில்

ஆழ்ந்தாய்விட்டது. அந்த வீட்டில் மட்டும், என் வரவை எதிர்பார்த்து ஒரு சிறு விளக்கு மங்கலாய் எரிந்து கொண்டிருந்தது. நான் விளக்கருகில் போய் உட்கார்ந்தேன். திரியை நெர்ந்தவே, சில சுடர்கள் தெறித்து, விளக்கின் பிரகாசம் அதிகமாயிற்று. அவ் வறையின் ஒரு மூலையில், பழம் புடவையின் மீது இரண்டு ஸ்திரீகள் படுத்திருப்பதைக் கண்டேன். விளக்குப் புஷ்பித்ததை, அதாவது சுடர் சிந்தியதை, நற்சகுனமென்று சொல்லிக் கொண்டார்கள். சமயலறையினின்றும் ஒரு பாட்டி வந்து உறங்குவோர் இருவரையும் எழுப்பினள். அவ் விருவருள் ஒருத்தியை—சுமார் 10 வயதுள்ள மெல்லிய அழகிய பெண்—பலமுறை பிடித்துக் குலுக்கிக் கண்ணைத்துடைத்து கசகசென்று காதில் இரகசியமாய்ச் சொல்லி, என்னை வந்து சேவிக்கும்படி செய்தனர். அவள் தான் எனக்காகப் பார்க்கப்பட்ட பெண் என்று சொன்னார்கள். அவள் நமஸ்கரித்ததும், எழுந்து வீட்டிற்குள் மறைந்துவிட்டாள்: சற்று வெட்கி முகம் சிவந்தாள் என்று நினைக்கிறேன். ஆனால், அதற்குள் என் கருத்தும் நோக்கமும் மற்றவளால் பிணிப்புண்டன. அவளும், விழித்துக் கொண்டாள் என்றாலும், அரைத் தூக்கத்துடன் விளக்கு முகமாய் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவளது அழகிய கருங் கூந்தல் அவளைச் சுற்றி நாற்புறமும் சுருள் சுருளாய் ஆடைபோல் பெருகி படிந்து தொங்கிற்று. அவளுக்கு சுமார் 18 வயது இருக்கலாம். அவள் தூக்கத்தில் விழித்துப் பார்த்ததுகூட என் மனதில், அந்தத் தெய்வீக சுவப்ன காட்சியை நன்கு ஞாபகத்திற்குக் கொணர்ந்தது. அவளுடைய அழகு நிறத்தாலோ உருவாலோ, மூக்கு, விழி உதடு இவைகளாலோ, கண்ணுக் கினிய கூந்தலாலோ என்று பிரித்து எடுத்துச் சொல்ல முடியாததாயிருது. அவளைச் சார்ந்த ஒவ்வொரு அம்சத்திலும் ஒரு வித

அதிசய அழகும் மனத்தைக் கவரும் வசிகர சக்தியும் விளங்கின. என் முன் வீற்றிருந்த அப் பெண்மணியின சம்பூர்ண காட்சி என் இருதயத்திலுள்ள பௌருஷத்தைக் கிளரச்செய்து, என் மனத்தில் காதல் அதிர்ச்சியை விளைத்தது. ஒரு விதமாய் நான் கண்ட கனவு, அப்பொழுதே அனுபவத்திற்கு வந்தது என்று உணர்ந்தேன். அது முதல் எப்போதும் அவளைக் காணும் போதெல்லாம்,

"காதல், என் ஆவியாம் யாழினைக் கைக்கொண்டு
நாத நரம்புகளை நைதலுறப், புடைத்து,
என்னையே யான் மறக்கும் இன்பம் விளைத்திடுமால்.
காதல ஒளிர் கரங்கள் காலக் கலம் ஏந்தி,
ஆதரத்தின் மெல்ல அசைதர அவ்வேளை,
பொழுது கணம்கணமாய் பொன் மணலிற் போந்திடுமால்.

மனக் களங்க மற்ற அவ் விளம் பிராயத்தில் என்னாசை பனிக்கட்டியினும் தூய்மை வாய்ந்திருந்தது. விஷயானுபவ எண்ணமோ ஆசையோ ஒன்றும் அதில் இல்லை. அந்த நடனமாதுக்காக நான் பட்டதை விட இந்தக் காதல் எவ்வளவோ பரிசுத்தமாயும் ஆழ்ந்ததாயு மிருந்தது. அவளுடன் ஒரே கிராமத்திலிருந்தாலும் போதும். அவள் உட்கொண்டு சுவாசிக்கும் பாக்கியத்தைப் பெற்ற காற்றை உட்கொள்ளக் கிடைத்தாலும் போதும், என்று இருந்தது. அவள் ஆடையின் தலைப்பு நுனியின் ஸ்பரிசமே, நான் ஸ்வப்பனத்திலும் கூடக் கிடைக்குமென்று எண்ணாத அளவிலா ஆனந்த மாகும். அவள் மீதுள்ள என் ஆசையை எதற்கு ஒப்பிடுவேன் ?

"மின் மினி விண் மீன் விரும்புவது என்கோ,
இரவு விடியலுக்கு ஏங்குவது என்கோ,

இந்த ஜம் துன்பியல் வாழ்க்கைக்கு அப்பால்,
நந்தலில் ஒன்றை நாம் நசைவதே என்கோ? ''

வெகு தூரத்திற் கப்பாலுள்ள ஒன்றிற்கு என்றே நாம் விரதமாய் வாழ்வது போலு மாயிற்று என்னுசை.

அவளை அக்கணமே என் மனக் கோயிலின் கர்ப்ப கிருகத்தில் என் வாழ்நாளின் அதிஷ்டான தேவதையாய் ஆவாகனம் செய்து கொண்டேன். நற் செயல்களால் நிறைந்த பல்லாண்டுகள் அவளை நான் பூசிக்கலாமே யொழிய, அவளை என் பொருளாய் அடையவும் கூடுமோ? மனித ஸ்பாவத்திற்குதினந் தோறும் வேண்டிய பதார்த்தமாவதற்கு அவள் பாத்திரமோ? அதைக் கடந்த தைவீக ஒளியுடனும் நல்ல குணத்துடனும் கூடியவளே அவள் என்று எனக்குத் தோன்றிற்று. அவளை ஒரு தரம் நினைந்தாலும் போதும், அது எவ் விதக் கெட்ட மனப் போக்கையும் சரி வழியே திருப்பும்: மிகக் கெட்ட மனத் தாழ்வையும் நல்ல மேன்மையான குணமாய் மாற்றி என் ஆத்மாவை சுகத்தாலும் உற்சாகத்தாலும் நிரப்பிச் சாந்தப்படுத்தும். பின் னாட்களில் நான் மனம் போன வழி ஒழுகி உடலின் வேட்கைகளுக்கு இடம் கொடுத்த போதெல்லாம், அவள் நினைவாகிய ரக்ஷையால் என்னை காப்பாற்றிக் கொள்ளத் தவறிய போது தான். என் மனைவியை ஆரம்ப முதல் உண்மையுடன் காதலித்து வந்தேன். இன்னும் அப்படியே காதலிக்கிறேன், ஆயினும் இந்த மற்றோர் காதல் ஒருவன் இரு பெண்மணிகளை ஒருங்கே காதலித்த லாகும் என் பதை எனக்கு விளக்கிற்று. கவி சொல்லுகிறார்.

'' மனம்வரு கீழ்மையை அடக்கமாட்டுமோ,
கனம்படு மேம்பாட் டெண்ணம், கனியத்
தன்மொழி, நன்மரியாதை, இசை அவா,
உண்மைப் பற்று முதலிய உயர்குணம்,

ஆண்மகன் ஆக்குவ அனைத்தும் பயிற்றமென்
தோள்மகள் ஒருத்தி மீது தோன்றுறும்,
கன்னிக் காதலின் வல்ல கலைக்குரு,
மன்னுலக கத்துயான் அறியேன் மாதோ.”

என் மனைவியும் என் அதிஷ்டான தேவதையும் இம் மேன்மையான பாடலின் உண்மையை முழு வலியோடும் யான் உணரும்படி செய்தனர். ஒருத்தி நான் காதலிக்கத் துவக்கு முன்னமேயே எனக்குச் சொந்தமாய் விட்டாள். மற்றவளோ நான் சொப்பனத்திலேனும் அடையலா மென்று எதிர்பார்க்க முடியாத வண்ணம் வேறொருவருக்கு உரியவளாய், எனக்கு எப்போதும் கிட்டாதவளா யிருந்தாள். இதனாலேயே என் கன்னிக்காதல் முழுபலம் குன்றி என் மேல் அதன் நுண்ணிய சக்தியை முற்றும் செலுத்த முடியாமல் போயிற்று. ஆகவே, நான் மனிதன் அடையக் கூடிய சம்பூர்ண தசையை அடையாதவனா யிருக்கிறேன்.

என் மணப் பெண்ணை மறுநாள் சாவகாசமாய் வீட்டில் வளையவரும்போது கண்டு சரியென ஒப்புக்கொண்டேன். மிருதுவாய் தளதளத்த அவள் பொன்மேனியைக் கண்டு அவளைக் கொண்டேனே யல்லாது, நன்கு வழங்கக்கூடிய நற்குணங்கள் அவளிடம் பொருந்தியுளவா என அறியத் தருணம் வாய்க்க வில்லை. அவள் என்னைப் பற்றி என்ன அபிப்ராயம் கொண்டாள் என்று கேட்டுக் கவனிப்பதும் உண்டோ? எனவே இன்னும் ஒரு பக்ஷத்திற்குள் என் கலியாணத்தை நடத்தத் தீர்மானித்தார்கள்.

என் கலியாணத்தில் நேர்ந்த ஒரே ஒரு அதிசய சமாசாரத்தை மட்டும் இங்கு எடுத்துக் கூறுகிறேன் எனக்கு ஒன்றுவிட்ட சிற்றப்பனும் என குருவுமான மஹாதேவன், அவ

சியம் கலியாணத்திற்கு வரவேண்டியவனன்றோ? என் அதிஷ்டான தேவதையும், உண்மையில் என் மனைவிக்கு மதினியுமான அப் பெண் மணியை அவனும் அப்போது காண நேர்ந்தது. நான் புருஷதிலகனாய்க் கருதிய அவன் என் மனத்துறை வழிபடு தெய்வத்தை எவ்வாறு கொள்ளுகிறான் என்றறிய மிக்க ஆவல் அடைந்தேன். பெண்ணழகை மதிப்பதில் தேர்ச்சி பெற்றவன் என்று சொல்லக் கொள்ளும் மகாதேவனும், அவளைக் கண்டதும் வியப்படைந் தானென்று நான் உடன் கண்டுகொண்டேன். அவளைப்பற்றி அவன் என்னிடம் பேசவில்லை யானாலும் பிறகு தன் சிநேகிதன் ஒருவனிடம் அவன் அவளைப் பற்றி பரிகாசமாயும் ரஸாபாஸமாயும் தாறுமாறாய்ப் பேசினது என் காதில் விழுந்தது. அளவிலாத் தாபமும் கோபமும் கொண்ட என் மனம் அதைக்கேட்டு தாங்க வில்லை. எனக்குள்ள தயா லேசத்தில் அவனை க்ஷமிக்கப் போதாமல் அவன் தீச் செயலைப்பொறுப்பது அரிதாயிற்று.

தமிழ்ச் செல்வம்.

Tamil Classics.

57. கும்பகருணனை எழுப்புதல்.

"உறங்குகின்ற கும்பகன்ன! உங்கள்மாய வாழ்வெலாம்
இறங்குகின்ற(து)இன்று காண்; எழுந்திராய், எழுந்திராய்!
கறங்கு[1] போல வில்பிடித்த காலதூதர்கையிலே
உறங்குவாய், உறங்குவாய், இனிக்கிடந்துறங்குவாய்!

"என்றும் ஈறிலா[2] அரக்கர் இன்ப மாயவாழ்வெலாம்
சென்றதீய, நம்முனோன்[3] தெரிந்து தீமை தேடினான்;
இன்(று) இறத்தல் திண்ணமாக, இன்னும் உன் உறக்கமே;
அன்றலைத்த செங்கையால் அலைத்(து) அலைத்(து) உணர்த்தினார்."

கம்பராமாயணம்.

முதல் நாள் போரில் தான் தோல்வியுற்றபின், மறுநாள் தனது தம்பி கும்பகருணனைப் போருக்கு அனுப்ப நினைந்து, சாபவசத்தால் உறங்கிக் கொண்டிருந்த அவனை எழுப்பி வரும்படி இராவணன் அனுப்பிய கிங்கரர்கள், அவனை எழுப்புவதைக் கம்பர் இவ்வாறு கூறியிருக்கிறார். இக்கவிகளின் சந்தத்தின் ஒற்புடைமையும் அழகும், தமது மன்னவனாகிய இராவணனது தீநெறி ஒழுக்கத்தை வெறுத்து, அதனால் தமது குலத்துக்கு விளையப்போகும் கேட்டை முன்னுணர்ந்து அத்தூதர்கள் சொல்லும் கூற்றுக்களும் மிகவும் பாராட்டத்தக்கன.

---

1 காற்றாடி; 2. அழிவில்லாத; 3. இராவணன்,